www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com



விடுதலைக்காய்

கவிதைத்தொகுதி

கனக ரவி

முதற்பதிப்பு 1998

விலை : ரூபாய் 50

வெளியீடு:-
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

கணணி பதிப்பு : ஒன்-லைன் பப்பிளிசேர்ஸ், வவுனியா.
அச்சிடல் : சுதன் அச்சகம், வவுனியா.



படிப்பகம்

www.padippakam.com



# சமர்ப்பணம்

போரினால் மடிந்த அனைவருக்கும்





படிப்பகம்

www.padippakam.com




| | | |
|---|---|---|
| 01. | விடுதலைக்காய் | 01 |
| 02. | சத்தமில்லாது சமாதானம் | 05 |
| 03. | பொய்யானால் | 07 |
| 04. | அவலமே | 08 |
| 05. | மிதிவெடி | 10 |
| 06. | எழுவீர் | 11 |
| 07. | உழவனும் கலைஞன் | 13 |
| 08. | இன்னல் அகன்று இன்பமாரி பொழியட்டும் | 15 |
| 09. | சிறையுள் சோகம் | 16 |
| 10. | தீர்வு கிட்ட வேண்டும் | 19 |
| 11. | ஓடிஓடி ஓடுகின்றோம் | 20 |
| 12. | ஒன்றாகப் பாட்டுப்பாடு | 21 |
| 13. | மிஞ்சும்............ விஞ்சும் | 22 |
| 14. | மிதந்தவன் | 24 |
| 15. | மக்களே ஒன்றாக எழுவீர் | 25 |
| 16. | ஆயுதங்களை விற்கின்றாரே அமைதி பற்றி பேசுகின்றாரே | 26 |
| 17. | ஏழை உழவனும் மாரி மழையும் | 28 |
| 18. | போர் | 30 |
| 19. | பெற்ற மனதிலிருந்து....... | 31 |
| 20. | மலரட்டும் நாளை | 33 |
| 21. | ஆயுதம் ஏந்துவோம் | 34 |
| 22. | வெறுமையானது வாழ்வு | 36 |
| 23. | ஆட்கொல்லி அழகன் | 38 |
| 24. | உண்ணா விரதம் | 40 |
| 25. | மாணவரின் ஏக்கம் | 42 |
| 26. | பட்டினிச்சாவா பட்டினிப்போரா | 43 |
| 27. | வேண்டாம் | 45 |
| 28. | வேண்டும் | 45 |
| 29. | பிருசுப்பாதம் | 46 |
| அட்டையின் பின் - வெண்புறா | | -- |




படிப்பகம்

www.padippakam.com



# முன்னுரை

## மௌனமும் பேசும்

"வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்" மற்றொரு பாய்ச்சலைச் சாத்தியமாக்கியுள்ளது. தனது அரவணைப்பில் வளர்ந்த ஒரு கவியின் படையலைத் தமிழ்கூறு நல்லுலகுக்கு வழங்க முன்வந்துள்ளது. இதன்வாயிலாக இந்தவட்டம் செக்குமாட்டுச் சுழற்சியாக இல்லாமல் சுழல் ஏணி முறையில் மேல் நோக்கிச் செல்லும் வட்டம் என்பது எண்பிக்கப்படுகிறது. கனக ரவியின் இக்கவிதைத் தொகுதி வன்னி மண்ணே புளகாங்கிதம் கொள்ளத் தக்கதென்பதால் வவுனியா கலைஇலக்கிய நண்பர்கள் வட்டம் பெருமிதம் கொள்வது நியாயமுடையதே.

கனக ரவி வ.க.இ.ந.வட்டத்துடன் இணைந்து இயங்குவதற்கு முன்னரே ஸ்தாபனப்பட்டுக் கூட்டுச் செயற்பாடாகக் கலை இலக்கியப் பணியாற்றி வந்துள்ளார். அவரது அரங்கச் செயற்பாடு 1985 இலிருந்து தொடங்கி வளர்ந்து வந்துள்ளது. பூந்தோட்டத்தில் மலரவனுடன் இணைந்து "இளந்தளிர் கலாமன்றம்" என்ற பதாதையின் கீழ் பல கலைஞர்களை செயலூக்கம் கொள்ளச் செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்துவந்துள்ளார். இந்த அமைப்புக்கு 1992 இன் பிற்பகுதியில் கனகரவி தலைவரானார். அந்த இளந்தளிர் கலாமன்றம் தேசியமட்டத்தில் முதற் பரிசுகளைத் தட்டும் பரிணமிப்பை அடைந்தபோது, 1993 இல் "பூந்தோட்டம் எழுச்சி இளைஞர்கழகம்" எனப் பெயர்சூடிக் கொண்டது. சிறந்த நாடகப் பிரதி, நெறியாள்கை, மேடையமைப்பு, நடிப்பு எனப் பலதுறைகளில் பூந்தோட்ட இளைஞர்கள் "தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்", வவுனியா நகரசபை உள்ளிட்ட பல அமைப்புகளிடம் பரிசுகளையும் பாராட்டுப்பத்திரங்களையும் பெற்றிருக்கின்றனர். அப்பரிசுகளதும் பாராட்டுகளதும் பாத்திரமாய் இருந்ததுடன் அவற்றைத் தமது நண்பர்கள் பெறுவதற்கான சூத்திரதாரியாகவும் இவர் விளங்கியுள்ளார். அத்துடன் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் (S.L.M.C) 1997 இல் தேசிய மட்டத்தில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவர்



படிப்பகம்

www.padippakam.com



இரண்டாம் பரிசு பெற்று சிறுகதையாளராகவும் அடையாளப்படுத்தியுள்ளார். அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (I.B.C) வாயிலாக சிறந்த செய்தியாளராக வளர்ந்துமுள்ளார்.

இவருடைய கவிதைத் தொகுதியைப் பற்றிச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் இவை அவசியமா என்ற கேள்வி எழலாம். கவிதைகளினூடே பயணிக்கையில் அவற்றுடன் ஒன்றி அனுபவிப்பதற்கு இந்த தகவல்கள் அவசியமானவையே. இவர் தனிமரமல்ல, ஓங்கி வளர்ந்து கிளை பரப்பும் பெரும் ஆலவிருட்சத்தில் ஒரு விழுது இவர். அந்த உணர்வுடன் இவர் "எழுவீர்" என அறைகூவியெழுதும் கவிதையில், "விழுதுகள் தாங்கா ஆல் எங்கே? விழுமியம் காக்கா மானிடம் எங்கே" எனக் குரல் எழுப்புவதை நோக்கவேண்டும். தனிமனிதராய்த் தமக்குள்ளே அழுந்தும் மனப்பிறழ்வாளர்களில் ஒருவராயில்லாமல், துடிப்புடன் செயலாற்ற வையகத்தைப் பள்ளியெழுச்சிகொள்ளப்பாடும் பாங்கு, ஆரம்பந்தொட்டு கூட்டுச் செயற்பாட்டில் இயங்கியதால் வந்தமைந்த ஒன்றென்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். இயந்திரக் குழல்களின் முன் செயலற்று முடங்கிப் பதுங்கும் எமது சமூகத்திடம்

"இயந்திரக் குழல்களுக்கு முன்
இயக்கமற்றிருப்பதை
அர்த்தமற்ற தாக்குவோம்
அனைவரும் எழுவீர்"

என அறைகூவும் போது, இது எடுபடுமா என்ற ஐயம் இவருக்குள் தட்டுப்படவில்லை. மக்கள் எழுவர் என்ற திடமனதை இவரது இயக்குதிறன் இவருக்கு ஏற்கனவே ஏற்படுத்திவிட்டது.

"நிச்சயமாக நல்லவிதை முளைக்கும்
சூடாக்கிப்போட்டாலன்றி முளைக்கும்
நிச்சயமாக"

என்ற தெளிந்த மனம் இவருடையது. வெறும் சுயநலமும், ஏமாற்றும், கயமையும், கபடத்தனமும், காட்டிக்கொடுப்பும், குழிபறிப்பும், வஞ்சனையும் என்ற வெக்கைகள் இல்லாத - ஆதலால் சூடேற்றிவிடாத - உள்மனத்திலிருந்து எழும் குரல் மக்கள் என்ற நல்ல நிலத்தில் நிச்சயமாய் முளைகொள்ளும், வேர்பரப்பும், விழுதூன்றும், தோப்பாய் விரியும், புத்துலகாக்கும்.

*விடுதலைக்காய்* **கனக ரவி**

படிப்பகம்

www.padippakam.com



நாம் படைக்க வேண்டிய அந்தப்புதிய உலகம் பற்றிய கனவில் மட்டும் அவர் மூழ்கிவிடவில்லை. நிதர்சனத்தில் அவர் ஆழக்காலூன்றி-யுள்ளார். மக்களோடும் செய்திகளோடும் அவர் ஊடாடும் விதம் அத்தகையது. செய்திகளை வெறும் ரசனைக்குரியதாக்கி விற்பனைப்-பண்டமாய்க் கொள்ளாமல் உணர்ந்தனுபவித்து ஈடுபாடுகொண்டு மற்றவருடன் பகிரும் பக்குவம் அவருக்குண்டு.

"வயதுக் கட்டுப்பாடு வலை மீண்டு
கிளாலிக் கடல் கடந்தவன்
கிரேக்கக் கடலில் மிதந்தான்"

எனும்போது அவர்கொள்ளும் வேதனை மற்றவரைச் சிக்கெனப் பற்றும். "ஓடி........ஓடி........ஓடுகின்றோம்" என்ற கவிதையில்

"எல்லாம் விட்டு ஓடுகிறோம்
எங்கு ஓடுகின்றோமோ........?
எங்களுக்கே தெரியாது........!

என்கின்றபோது திக்குத்தெரியாத எமது போக்கின் அவலம் ஆதங்கமாய் வெளிப்படுவதைக் காண்கிறோம். அரச பயங்கரவாதம் விதைத்து அறுவடை செய்யும் கொடுமை விளைச்சல்கள் இவை. இந்த "வெறும் ஓட்டத்துக்கு" எது காரணம்? யார் பொறுப்பு?

"தீட்டாகிப் போனவர்க்கு
தீமைகள் எப்போ
தீரும்
தீர்வு எப்போ கிட்டும்"

("தீர்வுகிட்ட வேண்டும்")

மக்கள் எப்படித் தீட்டாகிப் போவர்? தீட்டாகிப் போனால் தீர்வு கிட்டாதுதான். மக்களின் எழுச்சிக் கொந்தளிப்பிலேயே சகல தீட்டுகளும் சாம்பாராகிப் போக முடியும். மாறாக, மக்கள் தீட்டாக உள்ள நிலை தொடர்ந்தும் நீடிப்பின்,

"உண்மைகள் தினமும்
உரமாகப் புதைபட"

("சத்தமில்லாது சமாதானம்")



படிப்பகம்

www.padippakam.com



நேரும். இன்றைய கொடூரங்களுக்கு உரமாக உண்மைகள் ஆகும் அதிமோச அவலமா எங்களது? எங்கள் இருப்பின் காரிருளைக் கவி எவ்வளவு ஆழமாய் உணர்த்துகிறார், உண்மைகள் உரமாகின்றன என்பதன் வாயிலாய்! பொய்களாலல்ல உண்மைகள் கொண்டே நாங்கள் விளாசப்படுகிறோம்.

"உக்கிரத் தாக்குதலால்
கிராமம் கிழிந்திருக்குமோ?"

என "பொய்யானால்" கவிதையில் ஏங்கும்போது கிழிந்திருக்குமோ என்ற கற்பனைத்திறன் இதயத்தைத் தாக்கியலைக்கழிப்பதை உணரமுடியும். நாம் ஒருமையில் இல்லை, பல கூறுகளாய்க கிழிபட்டுத்தான்.

"அம்மா அடுக்களையோடு
உறவு கொண்டவை
உருக்குலைந்திருக்குமோ?
ஆசையாய் வளர்த்த பூஞ்சோலை
புழுதி படர்ந்திருக்குமோ?"

என்ற அனுமான் வாலென நீளும் ஓராயிரங்கேள்விகளுடன்தான் பொழுதுகள் புலர்கின்றன. எமக்கான விடிவு?........உண்மை விடிவு?

"சீனி நாவில்தான் பட்டு இனிக்கும்
கொஞ்சம் மேலே கண்ணில் பட்டால் எரியும்"

எனக் கவி சொல்லவருவது என்ன? நமது கையே நம் கண்களைக் குத்திவிடுவதையா? நமது கைகள் எங்கள் பிரக்ஞைக்குள் கட்டுப்பட்டு இயங்கும் நாள் வருமா? அதன் மூலமாக எங்களது விடிவு சித்திக்குமா? அது உண்மை விடிவாகுமா?

பல கேள்விகளை எழுப்பும் கவி பலசந்தர்ப்பாட்களில் ஆழ்ந்த மௌனத்தைப் பேணுகிறார். அங்கே ஆழ்ந்திருக்கும் கவி உள்ளத்தைக் காண்பது வாசகர் பொறுப்பு. அதில் எனது குறுக்கீடு அவசியமில்லாதது. ஆதலால் நானும் கேள்விகளை எழுப்புவதுடன் அமைதி கொள்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



இக்கவிதைகளில் பொதிந்துள்ள ஆழ்மனத்துணர்வுகள் சொல்லோவியங்களால் வாசகரிடம் மடைமாற்றப்படும் அற்புதம் விதந்துரைக்கத்தக்கது. சிலரோ மனப்பிறழ்வுகளே ஆழ்மன உணர்வுகள் என மயங்கியநிலையில் இவை ஆழ்மனம் சாராதன என்பர். தம்மைப்போல் பிறரையும் யோசிப்பதால் வரும் கேடு அது. தனது விடுதலை மக்கள் விடுதலையால் மட்டுமே சாத்தியமெனக் கருதும் உழைப்பவர் ஆழ்மனத்தில் இருப்பதை மனப்பிறழ்வாளர்களால் உணரமுடிவதில்லை.

தனிமனிதவாத மனப்பிறழ்வாளர்கள் செய்யும் மற்றொரு தவறு ஒரு கவி தனது அனுபவங்களை மட்டுமே எழுத வேண்டும் என்பதாகும். இதனால் சிதைவுற்ற சிந்தையுடன் தாம் கொள்ளும் கொச்சை அனுபவங்களை இலக்கியமாக்குவர். அவை நசிவுப் படைப்புகள். மனிதரை மாக்களாக ஆக்கி விலங்குப் பண்ணைக்குள் முடக்குவன. மானுடம் வெல்லும் வண்ணம் உயர் விழுமியங்கள் சார் பண்பாட்டு விருத்திக்கு இலக்கியம் வழிகோல வேண்டும். தன் அனுபவமும், மானுடப்பொது அனுபவங்களும் உள்ளோடி அனுபவித்துணரும் கவிக்குப் பரந்த பார்வை வாய்க்கப்பெறும். மானுடப் பொது அனுபவங்களை ஒரு நல்ல கவியால் உணர்வோடு பாடமுடியும். இத்தொகுப்பிலுள்ள பல கவிதைகள் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

நல்ல கவிதையின் பண்பு அழகியலுடன் உணர்வு வார்க்கப்படுவதில் மட்டும் அடங்கிவிடுவதல்ல. புதிய பண்பாட்டுக் கோலங்களை உருவாக்கும் உயர்கருத்துக்களும் கவிதைக்கு அவசியம். அவை வாழ்க்கைக்குப் புதிய அர்த்தங்களை நல்க வேண்டும். மக்கள் உணர்வுகள், மொழிச்சேர்க்கைகளால் புதிய கலாசாரம் ஒன்றைக் கட்டியமைக்க ஏற்றதாகக் கனக ரவியின் கவிதைகள் ஆக்கப்பட்டுள்ளதை எவரும் ஏற்பர்.

புதிய ஜனநாகம், புதிய வாழ்வு, புதிய கலாசாரம் படைக்க முனையும் வீரமிக்க இளைய தலைமுறைக்கு புதிய இரத்தம் வந்து சேர்ந்துள்ளது. கெட்டபோரிடும் உலகம் வேருடன் சாயும். மக்கள் எழுச்சி பேரலையாய்ப் பொங்கியெழும். கிருத யுகம் எழுக!.

26.11.98
'சத்திமனை'
வவுனியா.

ந. இரவீந்திரன்



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com



# என் மனதிலிருந்து.........

இத்தொகுதி வெளிவரக் காரணம் எனது எண்ணமும் எனது நண்பர்களின் ஊக்கமுமே என்பதைத் தெரிவித்து எனது சில எண்ணங்களை எழுத்தில் தரலாமென நினைக்கின்றேன். நூல்களினூடாக வெளிவரும் கருத்துக்கள் சமூக அக்கறையுடையதாகவே இருக்க வேண்டும். இலக்கியம் ஒரு சமூகக்கலை சமூக இயங்கலுக்கு இலக்கியம் உந்து சக்தி - இவற்றையுணர்ந்தே மனித விடுதலைக்காய் சமூகத்தின் வாழ்நிலைப் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் படைப்பாளி படிப்பாளிக்கு விழிப்புணர்வுடன் வழங்க வேண்டும். இதனூடே உலக வளர்ச்சி, மனிதனின் சுதந்திரம், தன் போக்கில் போவதல்ல என்பதை அறைந்து பறைசாற்றுமென்பதுண்மை. எழுத்தாளனுக்கு சமூகப்பற்றுணர்வு, அர்ப்பணிப்பு என்பது எழுதுகோலும் தாள்களும் போலாகும். இதை அனுபவத்தில் உணர்ந்துகொண்டு தேவை உணர்ந்து வழங்கல் வேண்டும். ஏதோ அவ்வுணர்வுடனே சொற்ப மேனும் தந்துவிட்ட திருப்தி எனக்குண்டு.

வெண்புறா என்றால் அமைதி பற்றியே நினைவில் தோன்றும் - வெண்புறாவோ தேடப்படுவதொன்றாகி விட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் 1950 களில் பிக்காசோ அவர்களால் வெண்புறா அமைதியின் சின்னமாக வரையப்பட்டது. இதை உலகே ஏற்றது. வெண்புறா அமைதியின் சின்னமாக இன்னமும்..........

இதையுணர்ந்தே எனது கவிதைகளை மிக இலகுவாக எல்லோரும் படித்துணரல் வேண்டுமென்ற எண்ணத்துடன் படைத்தளித்துள்ளேன். விடுதலைக்காய் மக்கள் யாவரும் ஒருங்கிணைய வேண்டுமென்பதை ஆசையாகவும் கொண்டுள்ளேன். ஏனென்றால் ஈழத்தில் இன்று என்ன நடந்து கொண்டிருக்கின்றது என உங்களுக்கே தெரியும் - அதனால் மக்களுக்கு எதையும் கட்டாயப்படுத்தித்திணிக்க வேண்டாமென்று சொல்வதில் துளியென்றாலும் பொய்யிருக்காது. அலைந்து திரியும் அந்தர வாழ்வில் நீண்ட நேரம் எடுக்காது மிகச் சுருக்கமாக தெரிவித்துள்ளேன்.

நன்றிகள் என்பது மறக்க முடியாதது. எனினும் மறக்க முடியாதுவிட்டால் ஏன் எழுத்துக்களில் என்ற கேள்விகளுடன், பதியப்பட வேண்டுமென்று கருதி எழுதுகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com



என் வாசிப்புக்களின் அத்திவாரமான பாடசாலை கற்றலின் போது ஆசிரியருக்கேயான பக்குவத்துடன் எனக்கு வாசிக்கக் கற்றுத்தந்தவன், ந.ராஜ்குமார். அவன் எங்கு வாழினும் என் நினைவில் என்றென்றும் உறைபவன். பின் 1985களில் எனது கிராமத்தில் மேடையேற்றிய அன்பை அழிக்காதே என்ற நாடகத்தில் நடித்ததிலிருந்து வெளிவந்து பல நண்பர்களுடன் கலை இலக்கியமென்று ஓடிக்கொண்டிருந்தேன். நாட்டில் நடப்பவற்றாலும் ஓடித்திரிந்தேன். மீண்டும் பூந்தோட்டத்தில் 1990 களின் பின் பல நண்பர்களின் ஒத்துழைப்பால் ஒன்றிணைந்து செயல்பட்டோம். அதில் சி.மலரவன் சிறியவனாக இருந்தாலும் பல விடயங்களை தருக்கம் செய்யவும் எமது பிழைகளை நாமே சுயவிமர்சனம் செய்து செயற்படவும் கற்றுத்தந்தவன். இக்காலப் பகுதியில் மு.சிவலிங்கம் கவிஞர் முத்து சிவன் அவர்கள் நல்ல நூல்களை கற்கக் கூறியும், தனது அறிவையும் அனுபவத்தையும் தந்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் என் அறிவுக்கு உரமிட்டவர்.

நான் சில இடர்பாடுகளினால் சோர்ந்து போன வேளை, மற்றவர் தேவையுணர்ந்து எதைச் செய்வதானாலும் மனமுவந்து செயல் புரியும், மனிதர் பசிக்கு சாப்பாடு கொடுப்பதைவிடவும் சாப்பாடு எப்படித் தேட வேண்டுமெனக் கற்றுத் தரும், ஏதும் பிழையெனில் நேருக்கு நேர் விமர்சிக்கும் பழக்கமுடையவரான ந.இரவீந்திரன் எனக்குத் தெம்பூட்டி வந்துள்ளார். எனது கவிதைத் தொகுதிக்கு முன்னுரையும் மனமுவந்து தந்த அவர் ஐக்கியப்பட வேண்டுமென்ற அவாவும் கொண்டவர். இத்தொகுதி வெளிவரத் தன்னாலான பங்களிப்புச் செய்தவள். எனது கவிதைகளையும் விமர்சிக்கும் வெளியில் தெரியா நல்ல விமர்சகர். பிழையெனில் நேரடியாக தெரிவிக்கும் நற்பண்பு கொண்டவள், திருமதி சத்தியமலர் இரவீந்திரன்.

இத் தொகுதியை வெளியிடும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்திற்கும், எனது கவிதைகளை பிரசுரித்த இதழ்களான தாயகம் சஞ்சிகை, தினமுரசு வாரமலர், நவமணி வாரமலர், எனது கவிதைகளை ஒலிபரப்பிய அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (I.B.C) க்கும் கணனிப் பதிவு செய்து தந்த ஒன்லைன் பிறின்டேர்ஸ் இனர்க்கும் அச்சிட்டு நூலுருவாக்கிய சுதன் அச்சகத்தாருக்கும் இன்னும் இன்னும் எனது நண்பர்கள் அனைவருக்கும் என்மனதிலிருந்து பலமுறை நன்றிகள் கூறி கவிதைகளை படியுங்கள் என்பதோடு அமைகின்றேன்.

நன்றி

28.11.98 கனகரவி

பூந்தோட்டம் (க.ரவீந்திரன்)

வவுனியா



படிப்பகம்

www.padippakam.com



## விடுதலைக்காய்

ஒருநாள் விடிய வேண்டும்
ஒருநாள் விடியலுக்காகக் காத்திருக்க
ஒவ்வொரு நாளும் விடிந்தது
இருளகன்று பொழுது விடிந்தது
இப்பொழுது ஒளிவந்து பகலானது
இது வெறும் பொழுதே விடிதல்
இப்பொழுதின் பின்............
விடிவு தேடல்
விடிவு வேறாகியது
விடியல் பொழுதின் பின்
மனிதர்கள் நடமாடினர்
மனதில் பயம் ஊற்றெடுக்க
துயர்களைச் சுமந்தவராய்
துணையாகக் கடதாசிமட்டையும்
தூக்கிச் சுமந்து செல்வர்
இருந்தும் பயன் என்ன?
இப்பொழுது தான் விடிவு வேறாகியதே
தாங்கள் அவர்களில்லையென்பர்
தாங்கள் ஆயுதத்தை தொட்டதுமில்லையென்பர்
மனிதர்கள் அடையாளம் சொல்லி
மன்றாடுவர் - பின்
அவராகவே ஒப்புக் கொள்ள
அடைக்கப்பட்டிருக்கிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com



ஒப்புக்கொள்ள வைத்தது
ஓரளவு திறமையாகலாம்
நீதி மட்டும் செத்துக் கிடக்கும்
சட்டம் சரியாகவே தெரியும்
தேவையில்லை என்றவற்றை
தேவையாக்கிக் கொள்ள
விடியலுக்கான பாதை மாறியது
விடிவு மட்டும் இல்லை.................
இருப்பிடங்களை மக்கள்
இழந்தனர் இடிந்துபோன மனதுடன்
இடம் பெயர்ந்தனர்
பாடசாலை மண்டபத்துள்ளும்
படுத்துறங்கி வாழ்வர்
காட்டுமரங்களின் கீழும்
காலம் போகின்றது
நாட்டில் பரந்து ஓடியவர்
நலன்புரி நிலையங்களில்
நலனிழந்தவராக வாழ்வர்
உலகில் பறந்து ஓடியவர்
உணர்விழந்து வாழ்வர்
வெல்லும் விடிவொன்று கிடையா.......
குண்டுகள் பொழிவதால்
குருதி சொப்பளிக்க
குரோதங்கள் விதைக்கப்படுகின்றது
எங்கும் ஒளிக்க முடியாது
எதுவும் செய்யா மக்கள்
ஏங்கி ஓடித்திரிவர்
எதுவும் பேசாதிருந்து
ஏங்கி யேங்கி வாழ்வர்...............
இப்பொழுதினில்
விடிவு வேறென்று தெரியும்
பேச வேண்டுமென்று
பேசிக் கொண்டவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



பேசுவதற்குப் பலமுறைநாள் பார்த்து
பேச்சுப் பேசின்
பேச்சு வெறும் பேச்சுத்தான்
பேசி ஒன்றும் தீரவில்லை
பேசுவதற்கு நம்பிக்கையிழந்தும்
பேசுவதற்கு ஆயுதங்களை வைக்கச் சொல்வர்
பேசுவதற்கு ஆயுதங்களை வைத்துக்கொண்டு
பேச்சிலும் விடிவு இல்லை
பேச வேண்டும் விடிவிற்காய்...............
பிரச்சனையில்லை யென்று
பிணைத்து விட்ட கதையுமுண்டு
பிணங்களாக மனிதர் வீழ்வது
பின் ஏன் என கேள்வி எழுமே.............
பிரச்சனை எதுவென்று
பிரச்சினைகளுக்கும் தெரியாது எம் நாட்டில்
சரிக்கும் போரால்
சிதறிப் போனதுகளின் மத்தியில்
சிரிக்கும் அரக்கத்தனம்
சிந்தனை மட்டும்
விடியல் பொழுதினில்
விடியலை தேடுவது ஏனோ?
காற்றைக் கிழிக்கும் சத்தம்
காதுகளைச் செவிடாக்கி
கருவிலேயே சமாதானத்தை
கருக்குகின்றது
ஆயுதங்கள் இறக்குமதியாகி
அழிவுகளே பெருகுமல்லோ
அத்தனையும் தெரிந்து கொண்டு
பாதை திறப்பதென்று
பட்டதெல்லாம் காணாதென்று
பக்குவமாய் கதையளப்பர்
பாதை திறப்பெல்லாம்
சமாதான எண்ணம் கொண்டதென்று



படிப்பகம்

www.padippakam.com



சாவுகளின் பின் தான்
சமாதானம் காணத்தான்
சத்தங்கள் ஏன் தான்
விடியல் ஒன்று தேவையெனில்
விட்டு விடுங்கள் வீண் போரை
வாழ்வது தேவையெனில்
வாழ்வினில் உணர்ந்துகொண்டு
வாழ்க்கையை வாழுங்கள்.
மண்ணின் வளங்களும்
மனிதரின் உடல்களும்
மண்ணில் அழித்துக்கொண்டு
மண்டை ஓடுகளும்
மனிதச் சாம்பலும்
மண்ணின் மேலாக
மனிதர் காணாமல் போய்
மண்ணில் புதைபட்டும்போக
மண்ணில் வாழ
மனிதர் வாழ வேண்டுமே
ஆயுத வியாபாரம்
அமோகமாய் நடக்க
ஆயுத உற்பத்தி நாடுகள்
அபிவிருத்தியடைந்து கொள்ள
நாங்களும் செய்வோம் வியாபாரம்
முக்சக்கர வண்டிகளும்
செயற்கை கால்களும்
சவப்பெட்டிகளும் தான்
இத்தனையும் நடமுறையெனில்
இன்றே உணராவிடில்
வெறும் பொழுது விடிந்து கொண்டிருக்கும்
நீ விடுதலைக்காய்
கனவு கண்டுகொள்வதே உண்மை........
உண்மை விடுதலைக்காய்
கனவு கொள்வாய்............!



படிப்பகம்

www.padippakam.com



## சத்தமில்லாது சமாதானம்

உதரம் பசித்திருக்கின்றது
உதிரம் சிந்துகின்றது
இடியேறு தோன்றி
இசைவு முடங்கி
கனவுகளைத் தொலைத்தது
கலையாத தொல்லையாக்கி
சமாதானத்தை தேட
சறுக்கலாக.............
எரியாத சடலங்கள்
எல்லா இடமும் மிகைதர
உண்மைகள் தினமும்
உரமாகப் புதைபட
தேவையான பேச்சு
தேவையில்லாத தொல்லைதர
பேச்சுக்கள் போச்சுது
பேதலித்தலாக............
பாலியல் வன்முறைகள்
பலமுறை பரபரப்பாக்க
விசாரிக்கப்படாமலே
விதவைகள் தோன்ற
அமைதியின் அமைவிடம்
அன்னியமாக அமைய
அமைதிகள் அழிஞ்சுது
அநியாயமாக............
உலோக உற்பத்திகள்
உக்கிரமாக செயல்பட
மனிதனிடம் மனிதம்



படிப்பகம்

www.padippakam.com



மரணித்துக் கொண்டிருக்க
சுதந்திரக் காற்று
சுமையாகத் தோன்ற
சுதந்திரம் நெடுந்தூரம்
சுழன்றோட.........
இருள் சூழ்ந்த அனர்த்தங்கள்
இல்லாது போக
புதுமையான வழி
புயலாக வரவேண்டும்
சுத்தமாக
சுதந்திரம் பேச்சளவிலுமில்லை
சுதந்திரமான வழி
சுணங்காமல் வாராதோ?
திசைமாறி ஓடி
திசை தெரியாது போனவர்க்கு
திடமான வழி
திசைமாறாமல் வாராதோ?
விக்ரமசிங்க தேவாரம் பாட
விக்னேஸ்வரன் குர்ஆன் படிக்க
சுகானி யேசுவை ஜெபிக்க
தோமஸ் புத்தரை வேண்ட
நம்பிக்கையில்லாது
நாசமாய் போவதில்
சந்தேகப் பார்வையுடன்
சாவுகள் சாதாரணமாக போவதில்
ஒன்றுமேயில்லை
ஒற்றுமை தான் தேவையெனில்
ஒரே வழி நடவுங்கள்
சமாதானத்திற்கு
சம்மதமில்லாததால்
சத்தங்கள் எழுப்பி சமாதானமா?
சமாதான வழி
சத்தமில்லாமல் வரவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



## பொய்யானால்

பாதை முழுவதும்
பற்றைகள் படர்ந்து
பாழாயிருக்குமோ?
உக்கிரத் தாக்குதலால்
கிராமம்
கிழிந்திருக்குமோ?
அயலவரின் வீடுகளும்
அத்திவாரத்தோடு
அழிந்திருக்குமோ?
கிணற்றடியில்
கிளைவிட்ட பயன்தரு
மரங்கள்
மாண்டிருக்குமோ?
அப்பா பயணித்த
துவிச்சக்கரவண்டி
தூளாகியிருக்குமோ?
துருப்பிடித்திருக்குமோ?
அம்மா அடுக்களையோடு
உறவு கொண்டவை
உருக்குலைந்திருக்குமோ?
அண்ணாவின் அறிவு நூல்கள்
குருதி சிந்தாது
குலைக்கப்பட்டிருக்குமோ?
அக்கா நீரூற்றி
ஆசையாய் வளர்த்த பூஞ்சோலை
புழுதி படர்ந்திருக்குமோ?
தங்கையின்
தங்கப்பாவை
தாழ்வாரத்தில்
தாண்டிருக்குமோ?
நான்வளர்த்த நாய்க்குட்டி
நாடோடியாய் ஓடித்திரியுமோ?
சிந்தனையில்
சிறகடிப்பவை பொய்யானால்..............!

---

*விருதலைக்காய்* — *கனக ரவி*

படிப்பகம்

www.padippakam.com



## அவலமே

பெரும்வீச்சோடு
நகர்வு நடந்து கொள்கின்றது
பாதை திறப்பதற்காய்
வான்பாதையிலும்
கடல் பாதையிலும்
தரைப்பாதை தான் மிகநன்று!
வீசும் புயலால்
வீதிகளில்



படிப்பகம்

www.padippakam.com



வீழ்ந்தன பிணங்கள்
ஒழிந்திருக்க முடியாது
ஓடினர் மக்கள்
நெடுநாள் போரில்
கொடுமைதான் போரால்
பாதைகள் திறக்கமுன்னும்
பயணங்கள் தொடரும்
பலனென்ன அவலம் தான்!
எல்லோரின் சடலங்களும்
எண்ணிக் கணக்குப் பார்க்க
குடிசையிலும்
குப்பிவிளக்கிலும் வாழ்வார்
குறிதவறாது வீழ்வார்
இவரோடு இன்னும் எத்தனை பேர்
இவற்றை நிறுத்தாரோ?
இலகுவாய் பாதை வேணுமெனில்
இயந்திரங்களை ஓய்வாக்குங்கள்
கண்முன்பாய்
காண்பதெல்லாம்
கொடுமையல்லோ கொடுமையல்லோ
விடுவிப்பதென்றால்
உயிர்களையல்ல
துப்பாக்கிகளை விடுவியுங்கள்
சுலபமாய்
சுதந்திரமாய் பாதை கிடைக்கும்
இயந்திரங்கள் இயங்கினால்
இலகுவல்ல பாதை
அழிவு அமைதிக் குலைவு எல்லோர்க்கும்
அவலமே........... அவலமே.............!



படிப்பகம்

www.padippakam.com



## மிதிவெடி

பக்குவமாய்
பாதுகாப்பாய்
பலநாள் காத்திருந்து
படுகாய முண்டாக்கி
காலொன்று சிதறிப் போகலாம்
வைத்தவரோ
எதிரிக்குத்தான் வைத்திருப்பார்
கால்கள் சிதறுவதோ
வைத்தவரின்
சகோதரனுக்கோ
நண்பனுக்கோ
எதிரிக்கோ
தனது காலாகவோ, போகலாம்
இவற்றையும் விட
நீண்டநாள் காத்திருந்து
ஆடு மாடுகளின் கால்களும் போகும்
அதுகளுக்கு மிதிவெடியை தெரியுமா?
மிதிவெடியும் அப்படித்தான்
ஆடுமாடுகளையோ
நண்பனையோ சகோதனையோ
எதிரியையோ வைத்தவரையோ
யாரையும் தெரியாது
என்றாலும் மதிவெடி பறவாயில்லை
சிலவேளை சின்னக்காயம் தரும் - ஒருசில
வெடிக்காமலும் போகும்
என்றாலும் மிதிவெடி பறவாயில்லை
வைப்பவரோ எதுவும் தெரியாததுபோல
வைத்துக் கொண்டே இருப்பார்.......மிதிவெடியை!



படிப்பகம்

www.padippakam.com



## எழுவீர்

பண்டிகையென்றால்
பட்சணம் கொடுத்து மகிழ்ந்து
பலர் கைகோர்த்து - ஆடிப்
பாடி வாழ்ந்தோமே
நாட்டுவளம் காத்த
நல்லோரே எல்லோரும் எங்கே?
தேடுவோம்
தேடிப்பிடிப்போம்
வேட்டோசையும்
வெடி குண்டோசையும்
வேதனையெல்லோ தருகின்றது
பயிர்கள் கருகுவது போல
உயிர்களும் உரமாகின
சகித்துக் கொண்டே
தகித்துப் போனோமே
நாங்கள் நேசித்தவை
நாசமாய் போகின்றதே
மாட்டு வண்டிகளும்
மண் மரவளங்கள் பலவும்
சிதைந்துபோவதை
சீர் செய்வோம்
ஏருழவரோடு எல்லோரும்
எழுவீர்...............எழுவீர்...............
அமைதி குலைக்கும்
அத்தனையையும் அறுத்தெறிவோம்
ஈரமான நெஞ்சங்கள்
ஈனராகப் போகாது
மானிடத்தைக் காப்போம்

*விடுதலைக்காய்* *கனக ரவி*

படிப்பகம்

www.padippakam.com



எழுந்து வாருங்கள்
இருளகல எல்லோரும்
ஒளியேற்று வோம்
இளையவரும் முதியவரும்
இயந்திரக் குழல்களுக்கு முன்
இயக்கமற்றிருப்பதை
அர்த்தமற்றதாக்குவோம்
அனைவரும் எழுவீர்
நிச்சயமான மரணத்தை
நிச்சயமாக்க கொலைகள் வேண்டாம்
நிச்சயமாக நல்லவிதை முளைக்கும்
சூடாக்கிப் போட்டாலன்றி முளைக்கும்
நிச்சயமாக
தடம்மாறி மரங்களின் இடுக்குகளால் ஒளிவரும்
இடம்மாறி உதிக்குமா சூரியன்
அமைதியைத் தேடுவோம்
இடம்மாறாது ஒன்றுபடுவோம்
காத்திருந்து
கருகியவரின் பிள்ளைகளே
பிஞ்சுகளில் கருகாது
நிமிர்ந்து எழுவோம்
விழுதுகள் தாங்கா ஆல் எங்கே?
விழுமியம் காக்கா மானிடம் எங்கே?
மௌனமும் பேசும்
மௌனமாய் விளங்கிடுவோம்
இதையெல்லாம் உணர்ந்தே
இன்னலகற்ற எழுவீர்.............
எல்லோரும்
எழுதல் வேண்டும்
எழுந்து தீமைகளை கொழுத்துவீர்
எல்லோரும் ஒன்றாய் எழுந்தால்
எவரிடம் தீமைகள்
எல்லோரும் எழுவீர்!!!

---



கனக ரவி

படிப்பகம்

www.padippakam.com



## உழவனும் கலைஞன்

தரிசு நிலத்தை
தரமாக உழுது
தானியம் விதைத்து - உழவன்
தகர்த்தவன் பசியை
ஏர் பிடித்து
ஏழையில்லாது வாழவே
ஏக்கம் கொண்டுழைத்தவன்



படிப்பகம்

www.padippakam.com



உப்பாய் உதிரும் வியர்வை
உடலிலே உறையும்
தப்பாய் சிந்தியாமல்
தரமாய் உழைப்பான்
பண்டுத்தி
பயிர் நட்டு
பச்சைப் பயிர் முற்றி
பசிபோக்க பார்த்து மகிழ்வான்
தைபிறந்தால் வழிபிறக்குமென்று
தைத்துக் கொள்வான் மனதுள்
தைப் பொங்கலோடும்
தைமகளோடும் கொண்டாட
காலபோகம் சிறுபோகம்
காளை போல உழைத்து
காலம் போற்ற வாழ்வான்
துலாமிதித்து துயரகற்றி
ஏத்திறைத்து எல்லாம்மகிழ்ந்து
ஈரமில்லாது வயல் கண்டால்
ஈரமாகுமே கண்கள்
ஈனன் அல்லவே உழவன்
ஈடுபாடு இல்லாதிருக்க
மனைவி மக்களோடு
மகிழ்ந்து வாழ்ந்தே
மண்ணில் சித்திரம் கீறுவான்
மக்களுடன் சிரித்து வாழவே
கலகம் செய்யாதே - நீ
கவிதை செய்வாய் வயலில்
அத்தனையும் உணவாக
அனைவரும் உன்பின்னே
உழவனே நீயுமொரு
உண்மைக் கலைஞனடா..........!



படிப்பகம்

www.padippakam.com



# இன்னலகன்று இன்பமாரி பொழியட்டும்

சிரித்திருந்த மக்கள்
சிதறி ஓடினர் மக்கள்
சித்திரவதைப் பட்டனர் மக்கள்
துப்பாக்கிகள்
துப்பியரவைகள்
துளைத்தன உடல்களை
துடித்தனரே மக்கள்
வெடித்த குண்டுகளுக்கும்
வீசிய குண்டுகளுக்கும்
துடிப்பிழந்ததே இதயங்கள்
ஓயாத போர்
ஓயாத மழை போல்
ஒன்றுபடாத நிலையில்
ஒற்றுமை தொலைந்ததே - இவை
ஏளனமாக்கவோ - மனிதத்தை
ஏழையாக்கவோ...........
கேள்விகள் மௌனித்தாலும் - ஒருநாள்
கேள்விகள் மெல்லவே எழுந்து சொல்லும்
சுடுகுழல்கள் ரவைகளை பிரசவிக்காது மலடாகட்டும்
சுதந்திரத்தை மக்கள் சுவாசிக்க
மாக்கள் போல் அலையாது
மனிதர் போல் வாழ
தேசமெல்லாம் ஓடி
தேடியதெல்லாம் தொலைத்து
தேய்ந்து போகாமல் வாழ........
போர் மழை ஓய்ந்து
போகம் விளைய
பொழியட்டும் மாரிமழை
இன்னல்கள் இல்லாது போக - நாம்
இன்பமாக வாழ
இடிமின்னல் தோன்றி
இன்பமாரி பொழியட்டும்...........!

---

*விடுதலைக்காய்* | **கனக ரவி**

படிப்பகம்

www.padippakam.com



## சிறையுள் சோகம்

அஞ்சியஞ்சி
அடங்கி நின்றும்
அடையாளம் தெரியப்படுத்தியும்
சுற்றிவளைத்து - அட்டையை
சுறண்டிப் பார்த்தும்
கைகட்டி நின்றும்
கைதாகினோம்
சிறை சென்றோம்
சிறையிட்டு - எம்மை
சித்திரவதை செய்தனர்



படிப்பகம்

www.padippakam.com



நாட்கள் வேகமாக
நகர்ந்தன
வருடத்தை தாண்டின
வருந்தினோம்
விலங்கிடப்பட்டுவந்து
விசாரணையில்லை
விரக்தியில் வாடினோம்
உண்மைகள் வெளிவர
உண்ணாமல் இருந்தோம்
உணரவில்லை அவர்கள்
தீனைத் திணித்தனர் - எம்
திடகாத்திர உடலில்
சதைக்குள் எலும்புகளும்
சத்தமில்லாது பதம் பார்த்தனர்
விசாரணையை இப்படிச் செய்து
விளையாடுகின்றார் எம் வாழ்வில்
தீனியைப் போல
தீர்ப்பையும் திணித்தனர்
சிறை தான்
சின்னதான மாற்றம்
சம்பளம் வேண்டுவோர்
சாதுவான போர்வைக்குள்
தண்டனை பெற்றவர்
தாண்டவமாடினர் - கோர
தாண்டவமாடினர்
மீண்டும் மீண்டும்
மீட்டிக் கொண்டோம்
மீட்ச்சி தேவையென்று
விசாரணை செய்யென்றால்
விசாரித்தனர்
விசாரிக்கப்பட வேண்டியவர்
மிளகாய்த் தூள் நீரும்
கொதித்த நீரும்



படிப்பகம்

www.padippakam.com



கூரிய ஆயதமும் கொண்டு விசாரித்தன
விடுதலை கேட்டால்
விடுதலை கிடைத்தது
சிறையுள் இருந்து மட்டுமல்ல
உலகைவிட்டே விடுதலை...........
பெற்றவரும் - அவர்
பெற்ற பிள்ளையும்
நெற்றிப் பொட்டை
நெருடித் தேய்த்தழித்த
நேசித்தவளும்
கண்ணீர் விட்டுக்
கத்திக் கதற
மூச்சு நின்று விடுதலையாகினர்.........
மூச்சிரைத்து தேசமே
மூச்சடைத்து நிற்கும் தேசமே
இக்கொடுமைகள்
இன்னும் இன்னும் பெருகின்
தேசமே மூச்சடைத்து நிற்குமே
இன்னுமெத்தனைபேர்
இடிவீழ்ந்தவராக
பெற்றவரைப் பார்க்க
பெற்ற பிள்ளையை பார்க்க
மனைவியையும்
மற்றைய உறவுகளையும் பார்க்க
சிறைக்கதவுகள்
சிறிதும் அசையாதோ?
தீர்ப்புக்களும்
திறபடாதோ?
சிறையுள் இருந்து
சிறை மீள்வதெப்போதோ?



படிப்பகம்

www.padippakam.com



## தீர்வு கிட்ட வேண்டும்

அவலக்குரல் தேசமெல்லாம்
அவலக்குரல்
எங்குமே அவலக்குரல்
செந்நீர் சிந்தியே
செத்து மண்ணாகியே
இடப்பெயர்வுகளோடு
இடர்பட்ட வாழ்வோடு
நிர்ப்பந்தமாகவும்
நிறையில்லாததாலும்
அவலங்களே தொடர்ந்தன
அநியாயங்களே படர்ந்தன
போர் வெப்பத்தால்
போட்டனர் குடில்கள்
குளக்கரைகளில்
குடியிருந்தோர்
மாரி மழையால்
மற்றொரு இடம் தேட
துன்பப்பட்டவர்
துவண்டு போனார்
தீட்டாகிப் போனவர்க்கு
தீமைகள் எப்போ
தீரும்
தீர்வு எப்போ கிட்டும்...............
கூனிக்குறுகி இருக்கும் ஆச்சி போல வாழ்வு
இல்லையில்லை
கூனிச்சுருண்டு குறுகிப்படுத்த ஆச்சிபோல வாழ்வு
தொல்லைகள் அனைத்துமகன்று
தொடரவேணும் வாழ்வு
வாழ்வின் அவலங்கள்
வாழ்வில் அகல வேண்டும்
தீமைகள் தொலைய வேண்டும்
தீர்வு எப்போகிட்டும்!



படிப்பகம்

www.padippakam.com



## ஓடி ஓடி ஓடுகின்றோம்

சூரியக்கதிர் கண்டு
பீதியுடன் வந்த போது
வெற்றி எங்களுக்கு
வாழ்க்கையில் இல்லாது போனது
உண்மை வெற்றி தோன்றியதும்
சொற்ப உடமையும்
தொலைந்ததே
உண்மை வெற்றியானது
வெற்றி நிச்சயம்
செய்தி கேட்டு
விழி கலங்கி வாழ்க்கை
விளிம்பிலானது...............
தொழில் எது செய்வோம்
தொழில் எங்கே செய்வோம்
பசிக் கொடுமை
பட்டினிச் சாவில் உணர்ந்தோம்........
செஞ்சிலுவை தந்த வாளி விற்று விட்டோம்
சீனி தேயிலை வேண்டித்
தேநீர் உறிஞ்சிக் குடிக்க.................
மழைக்குக் கூடாரம் அமைக்க
பொருட்கள் நிவாரணமாக
அதையும் விற்றுவிட்டோம்
அரிசி வேண்டி உலைவைக்க..............
எங்கிருந்தோ வந்த
எறிகணை வீழ்ந்து வெடித்தது
எல்லாம் விட்டு ஓடுகின்றோம்
எங்கு ஓடுகின்றோமோ...................?
எங்களுக்கே தெரியாது................!



படிப்பகம்

www.padippakam.com



# ஒன்றாகப் பாட்டுப்பாடு

ஒன்றாகப் பாட்டுப்பாடு
ஓயாது பாட்டுப்பாடு
பாடுபட்டுப் பாட்டுப்பாடு
பாட்டும் பயன் தருமே பாடு........ பாடு......

ஊக்கமுள்ள உழைப்பாளியைப் பாடு
உளமகிழ்ந்து உதவுவோரைப் பாடு
உலர்ந்து போகவேண்டும் தீமைகளென்று பாடு
உலகினிலே உயர்வு கொள்ளப்பாடு

விதியென்ன சதியென்ன வேணாம் பாடு
விளையாடும் பொய்மைகளும் வேணாம் பாடு
விழல் வேலை ஒன்றுமே வேணாம் பாடு
விளைநிலங்கள் சிறந்திட வேணும் பாடு

பாலையென்றால் மரமென்றும் பாடு
பாலன்றால் வெண்மையென்றும் பாடு
பாவை யென்றால் பாவமில்லைப் பாடு
பாட்டாளி படைப்பவனென்று பாடு

சாதிகள் தாழ்வு மேன்மையில்லையென்று பாடு
சாதி மனிதசாதியொன்றேதான் பாடு
சாதி பேசி பாதி மனிதராக வேசம் வேணாம் பாடு
சாதிபேசி முழு மிருகமாக வேணாம் பாடு

மகியென்றும் சிறக்க வேணும் பாடு
மகிமை பெற்று வாழ்வோமே பாடு
மனதில் மகிழ்ச்சி பெருக வேணும் பாடு
மக்கள் எல்லோரும் ஒன்றென்றே பாடு
மக்கள் எல்லோரும் ஒன்றாகப் பாட்டுப்பாடு.



படிப்பகம்

www.padippakam.com



## மிஞ்சும் ...............விஞ்சும்

சொந்தமாய்
சொத்துக்கள் கொஞ்சமாய்
சொந்தங்கள் பந்தமாய்- இனிக்க
சொல்லியே வாழ்ந்தோம்
பால் கறக்க
பசுக்களும்
வெள்ளாட்டுக் கடாக்களும்
வெங்காயத் தோட்டமும்
எங்கள் பொருளாதாரம்



படிப்பகம்

www.padippakam.com



அவலங்கள்
அதிர்வுடன் வந்ததால்
கஞ்சிக்கும்
கையேந்தி நிற்கின்றோம்
ஆமைகள் ஆயிரம் முட்டையிட்டு
அமைதியாய் இருக்குமென்றார்கள்
இங்கு ஆமைகள்
ஊர்ந்தன
ஊரும் ஓசையே அதிர்வு தான்
ஒவ்வொரு முட்டையிடுதலிலும் முழக்கம்
ஒவ்வொரு முட்டை வெடிப்பிலும் முழுங்கும்
உடமைகள் அழிந்து போம்
உடல்கள் ஊனமாகும்
சிதைவுகள் பொறுக்கி
சுடுகாடு சேரும்
சண்டைகள் ஊதிப்பெருத்து
சாப்பாட்டிற்கே தவித்து
சமாதானம் மட்டும் எப்படி?
போர் வாய்க்கால் வெட்டி
குருதி நீர் பாய்ச்சி
வறுமைக்கு வழி செய்து
வயிறு பசிக்கொடுமை காண
ஏக்கங்களை தாங்கி
இயலாமைக்குள் முடங்கி
நகர்வுகளைக் கண்டு
நகர்ந்தோம் தேசமெல்லாம்
இங்கேயும் அங்கேயும்
இரங்கித்தர வேண்டி அகதியாகி
சொந்த நாட்டிலும்
வெளிநாட்டிலும்
அகிலமெலாம்
அகதியாவதோ
மிஞ்சும் ............ விஞ்சும்...........!



படிப்பகம்

www.padippakam.com



## மிதந்தவன்

வயல் காணி விற்று
வட்டிக்குப் பணம் வேண்டி
வயதுக் கட்டுப்பாடு வலைமீண்டு
வாழ்ந்து முடிக்க
இத்தாலியில் இறங்கி - அம்மாவுக்கு
இன்பமாக செய்தியனுப்பப் போனவன்
கிளாலிக்கடல் கடந்தவன்
கிரேக்க கடலில் மிதந்தான்
அம்மாவோ கொழும்பு விடுதியில்
அம்மாவின் கதி..............?



படிப்பகம்

www.padippakam.com



## மக்களே ஒன்றாக எழுவீா்

முற்றியது போர்
வற்றியது நீதி
நெற்றிப் பொட்டிழந்தவர் எத்தனை பேருடன்
பற்றியெரிந்தது தேசம்

ஆக்கமாக்கவென
ஆயுத மேந்தினார்கள்
வெடி ஓசை வேணாம் என்றே
வேண்டும் மக்களாகியது ஏனென்று தெரியாதோ?
பாசம் காட்டி
வேசம் போட்டு
நாசம் செய்ய நினைத்தால்
தேசம் விட்டுத் தூரத்தாரோ மக்கள்
ஒன்றுபடுவதில்
ஓரணியாவதில்
ஒருவருக் கொருவர் பெரிது சிறிது பார்க்கின்
வெறுக்காரோ மக்கள்
எத்தனை காலம்
எடுத்தெறிந்து வாழ்வது மக்களை
எதிர்த்து மாய்ப்பது மக்களை
எழுச்சி பெறுவர் மக்கள்
எறிவர் அநியாயத்தை
எகிறுவர் அடக்கு முறைக்குள்ளிருந்து
மற்றோரெல்லாம்
மக்களின் பின்னே
மக்களே மாபெரும் சக்தி
மக்களே வெற்றி காண்பீர்
மக்களே உண்மைக்காய் குரல் கொடுப்பீர்
மக்களே அடிமை விலங்குடைப்பீர்
மக்களே ஒன்றாக எழுவீர்....................

*விடுதலைக்காய்* *கனக ரவி*

படிப்பகம்

www.padippakam.com



## ஆயுதங்களை விற்கின்றாரே அமைதிபற்றி பேசுகின்றாரே

அபிவிருத்தியடைந்த நாடுகளாம்
எதில் என்பது தெரியாததில்லை
இருந்த போதும்
சமாதானத்துக்காக
அமைதிபற்றி பேசிக்கொண்டு
ஆயுத வியாபாரமும் அமோகம்
கப்பல் கப்பலாக
காசு கொடுத்து வேண்டினர்
சின்ன நாட்டுக்குள்
சிந்தனை தொலைத்த போர் செய்ய
ஆயுதங்களை கப்பலில் கொண்டுவந்து
ஆறாய் பெருகியது குருதி
மிகையாகத் தான் தெரியும்
எப்படிச் சொல்லியும்
நிறுத்தவில்லையே
எவ்வளவோ கடின உழைப்பெல்லாம்
வரியாக்கப்பட்டு
அபிவிருத்தியில்லாது
ஆயுதம் வேண்ட அனுப்புகின்றனர்
இங்கே வியர்வை சிந்தி உழைக்க
அவர்களோ ஆயுதங்களை விற்று
ஆடம்பரமாய் வாழ்வார்
பெரிய நாடுகளிடம்
பெரிய குண்டு வேண்டி
பெருகுவது போர் ஒன்றே
இல்லையில்லை
பெருகுவது கடனும் தான்
பெருகிய கடனால்
பெரிய நட்டமில்லை என்று சொல்வார்
பொய் மேல் பொய் தான்
பொருளாதாரம்?



படிப்பகம்

www.padippakam.com



இரகசியமான ஒன்றல்ல
இல்லாததுமல்ல
ஒன்றே ஒன்று செய்யும் ஆயுதம்
உயிரை பறிக்கும்
உயிரைக் காப்பதாக சொல்வர் சிலர்
அவர்களைக் காப்பதாக சொன்னாலும்
அவர்களுக்கும் தெரியும்
ஆயுதங்களுக்கு யாரைச் சுடுவது என்று
தெரியாதென்று
ஆயுதங்களை வைத்திருப்பவர்க்கும்
தெரியாதுள்ளதே
சீனி நாவில் தான் பட்டு இனிக்கும்
கொஞ்சம் மேலே கண்ணில்பட்டால் எரியும்
வைத்திருக்கும் போது சுகமான சுமைதான்
வைத்திருந்தவர் நெஞ்சுக்குநேராக நீட்டினால்?
அதுதான் வேண்டாம்
எங்கள் உழைப்பை கொடுத்து
எங்கள் சண்டை நீள..........
அவர்களிடம் வேண்டி
நாம் அழிவான் ஏன்?
பயங்கரவாதம்
படுகொலைகள் எல்லாம் கண்டிப்பர்
தடை செய்வர்
ஆயதங்களை வியாபாரம் செய்யாதிருப்பாரோ?
ஆயுதங்களை தடை செய்வாரோ?
ஆயுதங்களை வையென்று சொல்லி
ஆயுதங்களை வைத்துக்கொள்வதற்கு
யார் சொல்லித்தந்தார்கள்
ஆயுத வியாபாரிகளா?
வாழப்பிறந்தவர் தற்செயலாக சாகிறோம்
வாழ்வோம் அதுவரை
அமைதி பற்றி பேச்சளவில் கொள்ளாது
ஆயுதங்களை முதலில் எறிவோம்
அமைதி வரும்தானாக!



படிப்பகம்

www.padippakam.com



## ஏழை உழவனும் மாரி மழையும்

கருமேகம் கூடி
கடும் மழை கொட்டும்
வயல்முழுவதும்
வரப்புயர நீர் நிறையும்
விளை நிலம் உழுது
விதைத்த விவசாயி மனமே மகிழ
விழிகள் விளையாடும்
பயிர் நட்டவர்க்கு
பசுமையான
பயிர்கண்டு
பலகோடி மகிழ்ச்சியே
ஏழை உழவனை மறுகணமே
ஏங்கவைக்கும் மழை
பகலிலே பலவிண் மீன்களாக
பகலவன் ஒளி
பலதுவாரங்களால் வீட்டினுள்ளே.......
இரவிலே
இடைவெளிகளால்
இரவுப் பூக்களாக
இனிய காட்சி தரும் நட்சத்திரங்கள்
வேர்வை சிந்தி
வேளாண்மை செய்வோர்க்கு
வேதன் அருளோ
வேயாது உள்ளதே கூரை
கூரை மூடாததை
கூனிக்குறுகி யோசித்தும்
கூடவில்லை



படிப்பகம்

www.padippakam.com



கூரை மூடுதல்
எண்ணியவை
எரிந்து நீறானதாக
எதிர்க்க சக்தியிருந்தும்
எதிர்க்க சக்தியில்லாதது போல்
எதையும் தாங்குவோம்
இதையும் தாங்கினோம்
இருகையும் உழைத்து
இரும்பாக இறுகியது - அதை
இறுக்குவோம் பொத்திப் பொத்தி
இயலாமையை நினைத்து நினைத்தும்
கனவுகளிடையே
காலம் போய்க் கொண்டிருக்க
உணவுக்காக
உப்பு நீர் உதிர
உறைவிடமோ
உடைந்து போயிருக்க
ஆடிக் காற்றுக்கு
ஆடிய கூரை
ஆவணிக்குப் பின்
ஆவதோ ஒழுக்கு.........
கொட்டில் வீடும்
கொட்டும் மழையில்
கொத்திப் பயிர் செய்ய
கொண்ட நிலமாகும்
மீட்சி தேடிக் கொண்டே
மீண்டும் பயிர் செய்வோம்
இடி முழக்கத்துடன்
இரைந்து பொழியும் மழை
மழைகண்ட உழவனுக்கு
மகிழ்ச்சி போனதே
மனதுள் வேதனை முளைவிட்டதே.....



படிப்பகம்

www.padippakam.com



## போர்

போரின் கோரப் பிடியில்
போரளிகள் எதிர் மோதுவர்
போரின் கொந்தளிப்பால்
போராளிகளுக்கு
சேதம் வரும்

சேதம் வராமலும் போகும்
பாவம் அப்பாவி மக்கள்
பயந்தோடினால் அகதிகள்
பதுங்கி தங்களை
பாதுகாக்க நினைத்தால்
பயங்கரவாதிகள்
எறிகணையில் சிக்கினால்
எண்ணிலடங்கா சடலங்கள்
விமானக் குண்டுகளின்
வீச்சுக்களில் - ஊனமுற்ற உடல்கள்
மனிதம் செத்துப்போக
மனிதர் மௌனித்துக் கொண்டிருக்க
மனித விழுமியங்கள்
மண்ணில் புதையும் போரால்..................!



படிப்பகம்

www.padippakam.com



## பெற்ற மனதிலிருந்து..........

பிள்ளையை கருவில் சுமந்த போதிலிருந்து
பிள்ளைக்கும் சேர்த்துண்டு
பத்துமாதத்தின் பின்
பக்குவமாய் பெற்றெடுத்து
பாலூட்டி
தாலாட்டி
வீரிட்டு அழுதால்
விரைவாய் வந்தணைத்து



படிப்பகம்

www.padippakam.com



விம்மியழுதால்
விளையாட்டுக் காட்டி சிரிக்கவைத்து
பசிக்கு அழும்போது
பக்குவமாய் அணைத்து
சோறு கடைஞ்சு தீத்தி
உருளைக்கிழங்கவித்துத் தீத்தி
மீன் முள்ளெடுத்துத் தீத்தி
அம்மா சொல்லிக் கொடுத்து
பாலர் வகுப்பிலிருந்து
படிப்பித்து ஆளாக்கி
ஆசைகள் பலவற்றை
ஆராரோ பாடியதிலிருந்து சொன்னவை
பாறிப்போனதே
பாழாய்ப் போனதே
காணாமல் போன பட்டியலிலும்
கண்ணிமை வெட்டாது பார்த்தும் பயனில்லை........
செம்மணியென்று சொன்னார்கள்
எரிக்காது கிண்டிப் புதைத்தவை
எலும்புகளாக மீட்கவும்
ஏமாற்றுதல்களும்
ஏய்ப்புக்களும் தான் நடக்கின்றன
பெற்று வளர்த்த நெஞ்சு
பரிதவிப்பதை
பாரினுள்ளோரும் கேளார்
அருகிலுள்ளோரும் கேளார்
அத்தனையும் எமாற்றாய் போகுதே
அழிவுக்கு ஆதரவாய் போகுதே
பெற்ற மனதில் எவ்வளவு
பெரும் பாரம் கனத்து கதை சொல்லுதே!



படிப்பகம்

www.padippakam.com



## மலரட்டும் நாளை

தேசத்தில்
தேயிலை
அபிவிருத்தியின்
அதிபன்!
உழைப்பவர்க்கு
உயர்வில்லை
ஊன் உடைக்கே
ஊதியம் வரட்சி
அழகான தோட்டத்திலும்
அழகான மலைகளிலும்
அலுக்காத உழைப்பல்லோ
மட்டமாக வெட்டி
மலர்ந்திருக்கும் கொழுந்து
அநியாயக் கத்தி கொண்டு
அளந்து வெட்டியிருப்பர் கூலியையும்
வேதனைகள்
வேர்வையும் கண்ணீருமாக
வறட்சியாக உண்மைகள்
வயிறு பசித்திருப்பதால்
புதியவர்
புரட்சி செய்ய
புத்தியில் மேன்மைகொண்டு
புதுநாள் வேண்டுமல்லோ
நேற்றும் இன்றும் போய்
நேர்மையாக மலரட்டும் நாளை................!!



படிப்பகம்

www.padippakam.com



## ஆயுதம் ஏந்துவோம்

கொப்புக்களில்
தாவும் குரங்குக் கூட்டம்
எங்கள் கையிலும்
கைக்குண்டு தேவை
தும்பிக்கையால்
நீர் உறிஞ்சி
நீராடும் யானைகள்
எங்களுக்கும் துப்பாக்கிகள் தேவை



படிப்பகம்

www.padippakam.com



மழைவர
மகிழ்ந்தாடும் மயில்கள்
எங்களுக்கும்
மரபுப் போர் பயிற்சி தேவை
துள்ளித் துள்ளி
ஓடித் திரியும்
புள்ளி மான்கள்
எங்களுக்கும் கண்ணி வெடிகள் தேவை
ஆழ்கடலில்
ஆனந்தமாய் நீந்தும்
மீன்கள்
எங்களுக்கும் கடற்கண்ணிகள் தேவை
காலை கரைந்தெழுந்து
கலகலப்பாய் களித்திடும்
காகங்கள் எங்களுக்கும்
ஏவுகணை எதிர்ப்பு ஆயுதம் தேவை
மாரி மழைக்கு
மகிழ்வோடு இசைக்கும்
தவளைகள்
எங்களுக்கும்
விமான எதிர்ப்பு துப்பாக்கி தேவை
மனிதனின் போர்ச் சுவாலை
எங்களையும்
தொட்டுச் சுட்டு சிதறடிப்பதால்
நாங்களும்
ஆயுதம் ஏந்துவோம்.............!



படிப்பகம்

www.padippakam.com



## வெறுமையானது வாழ்வு

வெளிநாட்டு ஆசையெல்லாம்
வெறுங்கையாய்ப் பேச்சு
எண்ணிக் கொடுத்த பணம்
எல்லாம் வீணாய்ப் போச்சு
காலம் பார்த்து
காத்திருக்க முடியாது
காலனுக்குப் பயந்தோ
கண்ட மிச்சமென்ன



படிப்பகம்

www.padippakam.com



அம்மா பட்ட துயர்
அம்மா வேண்டிய கடன்
அக்காவுக்கு சீதனம்
காணி ஈடுவைத்த
காசுக்கு வட்டி
முழுவதுமே பெரும் சுமை........
முடங்கிப் போயிருக்க
முடியாது போகவே
முயற்சிகள் முயற்சிகள்...................
என் கதை
எனக்கே வெளிச்சமாக
நண்பனும்
நான் வளர்த்த
நாய்க்குட்டியும்
நக்கலடிக்குது ஊரில்
திரும்பி வந்தபின்
திரும்பவும் போகவெண்ணி
திரும்பவும் கடன் வேண்ட.......
நினைக்கு முன்
நித்தம் நடக்குமொன்று
நிதர்சனமானது
கொழும்பு விடுதியில்
கொழுத்த காரணம் காட்டி
கொழுக்கி கையில் மாட்டி
கொடும் சிறையில் பூட்டினரே
வெளிநாடுபோக
வெளிக்கிட்டு வந்து
கண்ட மிச்சமென்ன.......?
கலங்கிநின்றுமென்ன.......?
வெறுங்கைதான்
வெறுமையானது வாழ்வு - சிறையுள்
வெறுமையானது வாழ்வு.......!



படிப்பகம்

www.padippakam.com



## ஆட்கொல்லி அழகன்

நீண்ட கூரிய இரட்டை பற்கள்
செந்நிற நாக்கு
பயங்கர விழிகள்
அதுவும் சிவந்திருந்தது
கோரமான கூரிய நகங்களும்
பேய்என்றார்கள்
கண்ணால் காணவில்லை
மனதுள் உருவமொன்றை நினைத்தும்
அச்சம் தோன்றவில்லை



படிப்பகம்

www.padippakam.com



உருக்கால்
குழல் போன்ற ஒன்று நீண்டிருந்தது
பின்புறம் மரத்தாலிருந்து
கைபிடித்து
கையாளக்கூடிய வசதிகள்
மிகவும் அழகாய் இருந்தது
அதற்குள்
சீறிப் பாயுமொன்றை
சின்னப் பையனும்
தோளில் போட்டிருந்தான்
முன்பகுதி வாழைப் பொத்தி வடிவில்
அதுவும் அழகாய் இருந்தது
இயக்கினால்
இரக்கமில்லாது செயலாற்றும்
நீண்டிருக்கும் குழலால்
பீச்சித் தள்ளும் செந்தணலாய்
பிய்த்துவிடும் உடலை செந்நீர் கொட்டும்
பிரிந்து போகும் உயிர்
அந்த அழகான
உருக்கு உருவத்தை
உருவங்கள்
உடன் வைத்திருந்தனர்
பிசாசை காணவில்லை
கோரமாக கூற நினைத்துப்பார்த்தேன்
அஞ்சவில்லை............
அஞ்சுகின்றேன்
அழகாய் இருக்கும் உருவம்
அஞ்சவைக்கும் செயல் புரியும்
தானாகவல்ல
தானியங்கியை இயக்க வேண்டும்
அதானலும் தான்
அஞ்சுகின்றேன்
ஆட்கொல்லி அழகனுக்கு...........!



படிப்பகம்

www.padippakam.com



## உண்ணாவிரதம்

சுயவளம் கொண்டு
சுதந்திரமாய் வாழ்ந்து
சுக்கல் சுக்கலாகி
சுருங்கி நெருங்கி
சுதந்திரமிழந்த வாழ்வு............



படிப்பகம்

www.padippakam.com



தாய் ஒருத்தி
சத்தமிட்டழுதாள்
சகலதுமிழந்த மகன்
சங்கிலியால் விலங்கிடப்பட்டு - சிறையுள்
உண்ணாமலிருக்கின்றான்........
காடுகளில் விடுவிட்டுத்திரிந்தவர்
கரை சேர
கப்பலுக்காக காத்திருந்தவரும்
உண்ணா விரதமிருக்கின்றார்.............
மண்வள நிலம்விற்று
மகிழ்ந்து வாழக் கனவு கண்டு
மகன் போனான் வெளிநாடு
மறுத்தாராம் அகதியில்லையென்று
மீண்டும் வந்து
மீள முடியா பகுதிக்குள்ளே
மீட்சி தேட
உண்ணாமலிருக்கின்றார்.......
பத்துமாதம் சுமந்து பெற்று
படிப்பித்த பிள்ளைகள்
பட்டதாரியான பின்னும் - வேலையில்லாது
உண்ணாமலிருக்கின்றார்..............

உணவும் இல்லை
நிவாரணமும் இல்லை
நிதர்சனமானது துயரே
நிர்வாணமானது வயிறே
நிவாரணத் தடை நீக்கக்கோரியும்
உண்ணாமலிருக்கின்றார்
உதாசிக்கலாமோ அவர் செயலை
உண்ணாவிரதமல்லோ அவர்கள் செய்வது............



படிப்பகம்

www.padippakam.com



## மாணவரின் ஏக்கம்

இடம் பெயர்ந்தோம்
குறிப்புப் புத்தகங்கள்
எடுத்துவரவில்லை
கொடுமை கண்டு
பயந்தே வந்ததால்
பாடசாலையில் தஞ்சம்
கல்வி தொலைந்தது
இடம்பெயர்வு சொந்த நாட்டில்
அதனால்........
பாதிப்பில்லையாம்
பரீட்சை நெருங்கியது
பதட்டமும் நெருங்கியது
இதயம் நொருங்கியது
பரீட்சையை வேணாமென்றோம் மனதுள்
பரீட்சை முடிந்தது
பல்கலைக் கழகம் போக
புள்ளிகள் குறைவானது
புத்திகள் குறைந்தவரா?
இல்லையே
இன்னும் இன்னும் படிக்கின்றோம்
ஏன் தெரியமா?
இவ்வளவு நாளும் படித்ததால்!



படிப்பகம்

www.padippakam.com



## பட்டினிச்சாவா? பட்டினிப்போரா?

வயல் சேற்றில் நாற்றுநட்டு
வயல் களத்தில் போரடித்து
வயிற்றுப் பசியில்லாமல் - நாம்
வாழ்ந்திருந்தோமே
உழவுத் தொழில் செய்து
உதிரம் வேர்வையாக
உடல் உழைப்பை பெருக்கி - நாம்
உண்டு மகிழ்ந்திருந்தோமே
அந்த வாழ்வு
அழிவு தரும் போரால்
அழிந்து போனதே
அழித்து விட்டு
அகதியாக்கி விட்டு
நிவாரண வெட்டா...........?
தீராத போர்தந்து
தீனுக்கு அழுத குஞ்சுகளாய்
திக்கெல்லாம் ஓடிக் கதறவிட்டு
தீண்டாதே நிவாரணத்தில்

உணவுக்கு உழைக்கவிடு
உதரத்தை வாடவிடாதே
உழைக்க சுதந்திரத்தை
உண்மையாய் தந்துவிட்டு



படிப்பகம்

www.padippakam.com



உங்கள் நிவாரணத்தை வெட்டுங்கள்
சண்டைகள் நீண்டு செல்ல
சமாதானத்திற்கென்றே
சத்தமிட்டுக் கொண்டு
சக்தியில்லாதவராக்கவா
சாப்பாட்டில் கைவைப்பு
சேர்த்து வைத்த பொருளாதாரம்
சேதமானதே குண்டுகளால்
சோகமானதே வாழ்நாள்
சோர்ந்து போனோமே நாம் தான்
எங்களை உழைக்கவிடு
எங்கள் பட்டினி தீர
எங்கள் கையிருக்கு
எதற்கு உங்கள் நிவாரணம்
எங்களை உழைக்க விடு
கையேந்தி கடன் வேண்டி
கையாலாகாப் போர் செய்து
மெய் வருந்தி உழைப்போரை
கையேந்த வைப்பதா
நீரோ போர் செய்து
நிறுத்துவதோ
நிவாரணத்தை
நிறுத்து போரை!
நிறுத்து நிவாரணத்தை!
கொடும் போர் செய்து
கொன்று குவித்துக் கொண்டு
கொடுக்காமல் நிவாரணத்தை
கொல்லவா திட்டம் தீட்டினீர்
பதறிய வாழ்வெல்லோ மக்களுக்கு
பரிந்து கையேந்தவா நிவாரண வெட்டு
பட்டினியால் சாகமாட்டோம்
பட்டினிப் போர் செய்வோம்...............!!



படிப்பகம்

www.padippakam.com



## வேண்டாம்

வெடிகுண்டு செய்பவரும் வேண்டாம்
வெடிகுண்டு வியாபாரியும் வேண்டாம்
வெடிகுண்டு வேண்டுபவரும் வேண்டாம்
வெடிகுண்டு வைத்திருப்பவரும் வேண்டாம்
வெடிகுண்டு வெடிக்கவைப்பவரும் வேண்டாம்
வெடிகுண்டு ஓசையும் வேண்டாம்

## வேண்டும்

ஏழையில்லா உலகு வேண்டும்
எல்லோரும் ஒன்றாக வேண்டும்
என்றென்றும் முன்னேற்றம் வேண்டும்
எட்டுத்திக்கும் மக்கள் சமமாதல் வேண்டும்
ஏருழவர் முன்னேற வேண்டும்
எல்லோரும் உண்டு மகிழ வேண்டும்
எல்லாத் துன்பமும் அகல வேண்டும்
எல்லாம் கிடைக்க எல்லோரும் உழைத்தல் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



## பிஞ்சுப்பாதம்

பிஞ்சுக் காலைக் கொஞ்சவும்
மண்ணில் பாதம் படாமலும்
மழையின் நனையாமலும்
சூரியன் சுடாமலும்
பிள்ளை உயர்வாகிட
பிழைகள் செய்யாமலே
பிள்ளைகளையும் சுமந்து
கனவுகளையும்..............



படிப்பகம்

www.padippakam.com



தொடரும் வாழ்வில்
தொல்லைகள் வராதென
தேடலுடன்
பொங்கும் நம்பிக்கை
வாழ்வின் மாறுதல்
வாழ்வை மாற்றாமல்
வாழ்ந்திடவே - பிள்ளைக்கு
வழிகாட்டியாகவும்
பாலூட்டி
சீராட்டி
பாடசாலை
பல்கலைக்கழக படிப்பு
பட்டம்
தான் உண்ணாது
தாய் பிள்ளைக் கூட்டி
எத்தனை சுமைகள்
அத்தனையும் நினைவில்...........
நெஞ்சத்துள்
இடிந்து நொருங்கிய
இடப்பெயர்வுகளின் - பின்
முட்கம்பி வேலிக்குள்
முடங்கி இருந்தபொழுது
முகாம் வாழ்வென்றார்கள்
மெல்ல மெல்ல
தத்தி நடைபழக
சேறென்ன குப்பையென்ன
மழையென்ன வெய்யிலென்ன
பிஞ்சுப்பாதம்........... நடந்தது...........



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



## வேண்டாம்

வெடிகுண்டு செய்பவரும் வேண்டாம்
வெடிகுண்டு வியாபாரியும் வேண்டாம்
வெடிகுண்டு வேண்டுபவரும் வேண்டாம்
வெடிகுண்டு வைத்திருப்பவரும் வேண்டாம்
வெடிகுண்டு வெடிக்கவைப்பவரும் வேண்டாம்
வெடிகுண்டு ஓசையும் வேண்டாம்

## வேண்டும்

ஏழையில்லா உலகு வேண்டும்
எல்லோரும் ஒன்றாக வேண்டும்
என்றென்றும் முன்னேற்றம் வேண்டும்
எட்டுத்திக்கும் மக்கள் சமமாதல் வேண்டும்
ஏருழவர் முன்னேற வேண்டும்
எல்லோரும் உண்டு மகிழ வேண்டும்
எல்லாத் துன்பமும் அகல வேண்டும்
எல்லாம் கிடைக்க எல்லோரும் உழைத்தல் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



## பிஞ்சுப்பாதம்

பிஞ்சுக் காலைக் கொஞ்சவும்
மண்ணில் பாதம் படாமலும்
மழையின் நனையாமலும்
சூரியன் சுடாமலும்
பிள்ளை உயர்வாகிட
பிழைகள் செய்யாமலே
பிள்ளைகளையும் சுமந்து
கனவுகளையும்...............



படிப்பகம்

www.padippakam.com



தொடரும் வாழ்வில்
தொல்லைகள் வராதென
தேடலுடன்
பொங்கும் நம்பிக்கை
வாழ்வின் மாறுதல்
வாழ்வை மாற்றாமல்
வாழ்ந்திடவே - பிள்ளைக்கு
வழிகாட்டியாகவும்
பாலூட்டி
சீராட்டி
பாடசாலை
பல்கலைக்கழக படிப்பு
பட்டம்
தான் உண்ணாது
தாய் பிள்ளைக் கூட்டி
எத்தனை சுமைகள்
அத்தனையும் நினைவில்...........
நெஞ்சத்துள்
இடிந்து நொருங்கிய
இடப்பெயர்வுகளின் - பின்
முட்கம்பி வேலிக்குள்
முடங்கி இருந்தபொழுது
முகாம் வாழ்வென்றார்கள்
மெல்ல மெல்ல
தத்தி நடைபழக
சேறென்ன குப்பையென்ன
மழையென்ன வெய்யிலென்ன
பிஞ்சுப்பாதம்........... நடந்தது...........



படிப்பகம்

www.padippakam.com




ஒவ்வொரு மனித மனதிலும்
கொதிப்புணர்வுகள்
களையப்படட்டும்

நெஞ்சங்கள்
கலவரமுண்டாக்காது
மனச் சாட்சியுடன்
விழிப் புணர்வைத் தூண்டட்டும்

மதங்கள்
மனிதனிடம் வேண்டாம்
யானைகளிடமே இருக்கட்டும்

இனங்களில்
பிரிவுகள் வேண்டாம் - உயிரைப் போல
மனித இனம் ஒன்றுதான்
உணர்ந்து கொள்ளுவோம்

கருத்து மோதல்கள் - தீர
கருவிகள் வேண்டாம்
அது கொடூரங்களைப் பெருக்கும்
கோரங்களைப் படைக்கும்

கோர முகங்களை மறைக்க
வெண்புறாவை ஏந்துவதில்
மிக மிக அதிக சிந்தனையுடன்
மேல் நோக்கிச் சிறகடிக்கட்டும்
வெண்புறா!!!

கனக ரவி

படிப்பகம்